தேதி : டிசம்பர் 2, 2013

**<u>எதிர்கட்சி தலைவர் (மாநிலங்கள் அவை) திரு அருண் ஜேட்லியின் ஃபேஸ்புக் போஸ்ட்</u>**

**ஜம்மு – காஷ்மீரில்  மகளுக்கு எதிரான நிலவரம் –**

நேற்று திரு நரேந்திர மோடியும் திரு ராஜ்நாத் சிங்கும் ஜம்மு-காஷ்மீரில் நடைபெற்ற பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினர்.

ஜம்மு-காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த அங்கமாக இருப்பது என்பது பாரதிய ஜன சங்கத்தின் அதாவது இன்றைய பாரதிய ஜனதா கட்சியின் சித்தாந்தத்தில் இடம் பெற்றுள்ள வெகு முக்கியமான விஷயம்.

முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீர் என்ற டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் தொலைநோக்கு கனவு இந்தியாவின் சரியான தொலைநோக்கு என்பதில் பா.ஜ.க. நம்பிக்கை கொண்டுள்ளது.

விசேஷ அந்தஸ்து என்ற நேரு சித்தாந்த தொலைநோக்கு, 1953க்கு முந்தைய அந்தஸ்து, தன்னாட்சி, மேலும், சுதந்தர பகுதி, என்ற குறிக்கோளுக்கு வலுவூட்டியது.  இந்த மூன்று சிந்தனைகளுக்காக ஒலிக்கும் ஆதரவு குரல்கள், ஜம்மு-காஷ்மீருக்கும் நாட்டின் பிற பகுதிகளுக்கும் இடையேயான அரசியல் அமைப்பு சட்ட அடிப்படையிலான அரசியல் உறவை பலவீனப்படுத்தியுள்ளது. விசேஷ அந்தஸ்தைப் பெறும் பயணம் ஒருமைப்பாட்டை நோக்கி அல்லாமல் பிரிவினையை நோக்கி தொடரப்படுகிறது.  இந்தப் பிரச்சினை குறித்த பொது விவாதம் நடத்த பா.ஜ.க. விடுத்துள்ள அறைகூவல், 370 –ஆவது பிரிவு குறித்த நிலைபாட்டை தளர்த்தியுள்ளதாக  யாராவது மாற்றிக்கூறினால் அது தவறான ஒன்று.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண் வேறு மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரை மணந்துகொண்டதும் நிரந்தரவாசி என்ற அந்தஸ்தையும் அந்தப் பெண்ணுக்கு கிடைத்து வந்த சிறப்பு உரிமைகள் மற்றும் சலுகைகளையும் அவர் இழந்துவிடுவார் என்ற ஜம்மு- காஷ்மீரின் சட்டங்கள் தொடர்பாக ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து விளக்கமளிக்கப்பட்டு வருகின்றன. கணவர் வசிக்கும் பகுதியைச் சேர்ந்தவராகத்தான் மனைவியை கருத வேண்டும் என்ற தவறான நம்பிக்கையின் அடிப்படையில் இந்த விளக்கம் அமைந்திருந்தது. ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் அரசியல் சாசன அடிப்படையில் இந்தச் சட்டப் பிரிவு செல்லத்தக்கதா என்று கேள்வி எழுப்பியுள்ளனர். ஜம்மு-காஷ்மீர் உயர் நீதி மன்ற பெஞ்ச் 2002,

அக்டோபர் 7-ஆம் தேதி வெளியிட்ட பெரும்பான்மை தீர்ப்பில், இந்தச் சட்டத்திற்கு மறு விளக்கம் அளித்தது. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண் வேறு மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரை மணந்துகொண்டதும் நிரந்தரவாசி என்ற அந்தஸ்தை இழக்க மாட்டாள் என்று கூறியது. அப்போது ஆட்சியில் இருந்த தேசிய மாநாடு அரசு சார்பாக ஆஜரான அதன் அட்வகேட் ஜெனரல் திரு. எம்.ஏ. கோனி, பெண்களின் கோரிக்கைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

*தீர்ப்பில் பதிவானவை –*

*"மாநிலத்தில் ஒரு பெண் நிரந்தரவாசி அந்த மாநிலத்தின் நிரந்தரவாசியல்லாத ஒருவரைத் திருமணம் செய்துகொள்ளும்போது அந்த மாநிலத்தின் நிரந்தரவாசி அந்தஸ்தை இழந்துவிடுகிறாள், மாநில அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரிவு 6ன் கீழ் விளக்கப்பட்டதைப் போல் அவள் நிரந்தரவாசி அல்ல என்று அட்வகேட் ஜெனரல் திரு. எம்.ஏ. கோனி வாதிட்டார். நிரந்தரவாசி அல்லாத ஒருவரைத் திருமணம் செய்துகொள்வதன் மூலம் மாநிலத்தின் நிரந்தரவாசி ஒருவரின் மகள் திருமணத்துக்கு முன் நிரந்தரவாசியாக தனக்கு இருந்த தனது சொத்துரிமையை இழப்பது மட்டுமல்லாமல்  மாநில அரசில் வேலை வாய்ப்பு, கல்வி உதவித் தொகை அல்லது அதைப் போன்ற அரசு வழங்கக்கூடிய அனைத்து விசேஷ உரிமைகளையும் இழந்துவிடுவாள். மனைவியின் அல்லது விதவையின் அந்தஸ்து அவளது கணவனின் அந்தஸ்தைப் பொருத்து அமையும், மேலும் அவர் இந்த மாநிலத்தில் வசிக்கவில்லை என்றாலோ நிரந்தரமாக வெளி மாநிலத்தில் தங்கிவிட்டாலோ திருமணம் மூலம் பெறப்பட்ட மாநிலத்தின் நிரந்தரவாசி என்ற அந்தஸ்த்தை இழந்துவிடுவாள்." என்று மேலும் தெரிவித்தார்.*

உமர் அப்துல்லா அரசு, தேசிய மாநாட்டு கட்சி ஆகியவற்றின் திட்டவட்டமான நிலைப்பாடு இதுதான். இந்த தீர்ப்பில் அதிருப்தியடைந்த தேசிய மாநாட்டு அரசு ஒரு உச்ச நீதி மன்றத்தில் எஸ்.எல்.பி. மனுவை அளித்தது.

2003ஆம் ஆண்டில் மக்கள் ஜனநாயக கட்சி, காங்சுடன் கூட்டு சேர்ந்து மாநிலத்தில் ஆட்சி அமைத்தது. மக்கள் ஜனநாயக கட்சி ஒரு மாற்று வழிமுறையைப் பின்பற்றியது. இந்த அரசு எஸ்.எல்.பி. மனுவை வாபஸ் பெற்றுக்கொண்டு 'ஜம்மு-காஷ்மீர் நிரந்தரமாக வசிப்பவர் (தகுதி இழப்பு) மசோதா 2004', என்ற மசோதாவை அறிமுகப்படுத்தியது. இந்த நடவடிக்கை, உயர் நீதி மன்றம் தெரிவித்த பெரும்பான்மை கருத்தை சட்ட ரீதியாக நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியாக இருந்தது.  இந்த மசோதா மக்கள் ஜனநாயக கட்சி மற்றும் தேசிய மாநாடு கட்சியினரால் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது. வேற்று மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரை மணக்கும் இம்

மாநிலத்தின் நிரந்தரவாசியாக இருந்த பெண்ணின் நிரந்தரவாசி அந்தஸ்த்தை ரத்து செய்கிறது இந்த சட்டம். இந்தச் சட்டம் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை கண்டறியுமாறு மார்ச் 2004ஆம் ஆண்டில், அப்போதைய பிரதமர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் மாநில அரசுக்கு ஆலோசனை கூறினார். மக்கள் ஜனநாயக கட்சியும் தேசிய மாநாட்டு கட்சியும் இதை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 370 சட்டப் பரிவில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட  மாநிலத்தின் விசேஷ அந்தஸ்தை தக்க வைத்துக் கொள்வதுடன் இணைத்தனர்.

சட்ட மன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் இந்த மசோதா, மேல் சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மேல் சபைத் தலைவர் ஓட்டெடுப்பு நடத்தாமல் சபையை ஒத்தி வைத்து, இந்த மசோதாவை மீண்டும் சட்ட மன்றத்துக்கே அனுப்பி வைத்ததால், அங்கேயே இது முடங்கியது. சமீபத்தில், இந்த மசோதாவை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2010ல் மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் ஒருவர் இந்த மசோதாவை தனிப்பட்ட உறுப்பினரின் மசோதாவாக மேல் சபையில் மீண்டும் அறிமுகப்படுத்தினார். தேசிய மாநாடு கட்சித் தலைவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வருவதில் உறுதியோடு இருப்பதாக போட்டி அறிக்கைகளை வெளியிட்டனர்.  சிறப்பு அந்தஸ்தும் காஷ்மீரி என்ற தனி அடையாளமும் பெண்கள் உரிமைகளுக்கு  எதிராக உருவெடுத்துள்ளன.

இந்த விவகாரத்தில் முதலமைச்சர் உமர் அப்துல்லா தனது கட்சி இதுவரை மேற்கொண்டுள்ள சந்தேகத்துக்கு இடமான நடவடிக்கைகளை  கண்டு கொள்ளாமல் இந்த விவகாரம் தொடர்பாக ட்விட்டரில் அடாவடித்தனமாக எழுதுவாரா?

கண்ணியமாக வாழும் உரிமைக்கு நிலைமைக்கும் பாரபட்சமான இந்த சட்டப் பிரிவுகளுக்கு இந்திய சட்டத்தில் இடமில்லை என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.